دليل المسلم الجديد

ترجمة المحتوى باللغة التاميلية
தமிழ் மொழி

# عشر ذي الحجة

# அந்த பத்து இரவுகள்

## துல்ஹஜ் மாதத்தின் இரவுகள்

mahadsunnah.com
sarhaan.com

MahadSunnah

## அந்த பத்து இரவுகள்
## துல்ஹஜ் மாதத்தின் இரவுகள்.

- ### இத்தினங்களை நாம் எப்படி வரவேற்க வேண்டும்?

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அடியார்கள் நல்லமல்கள் செய்வது அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான தினங்கள் இத்தினங்களை விட வேறு நாட்கள் கிடையாது, அதாவது துல்ஹஜ் முதல் 10 தினங்கள் எனக் கூற, அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் பாதையில் போராடுவதை விடவுமா? என வினவிர், அதற்கு அல்லாஹ்வின் பாதையில் போராடுவதை விடவும் சிறந்தது என்று பதில் அளித்தார்கள். பின்னர் தன் உயிருடனும் உடமையுடனும் அல்லாஹ்வின் பாதையில் சென்று திரும்பி வராத மனிதனைத் தவிர என கூறினார்கள். (புகாரி:969)

நல் அமல்கள் எனும் போது அனைத்து விதமான இபாதத்துகளையும் அது குறிக்கின்றது. அதாவது, நோன்பு, தொழுகை, ஹஜ், திக்ர், தக்பீர் கூறுவது, குர்ஆன் ஓதுவது, நல்வழிகளில் தர்மம் செய்வது ஆகியவற்றை குறிப்பிடலாம்.

## ➢ இத்தினங்களில் செய்ய வேண்டிய பிரதானமான அமல்கள்:

**01. நோன்பு நோற்பது,**

**பத்தாம் நாள் மாத்திரம் நோற்க முடியாது.**

**நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவியரில் ஒருவர் கூறினார்கள்:**

**"துல்ஹஜ் ஒன்பது தினங்களும் நபி (ஸல்) நோன்பிருப்பவர்களாக இருந்தார்கள்."(அபூதாவூத்)**

**குறிப்பாக ஒன்பதாம் நாள் அரஃபா தினத்தில் நோன்பிருப்பது இரு வருட பாவங்களுக்கு பரிகாரமாக அமையும்.**

**02. ஹஜ் கடமையை நிறைவேற்றுவது. இத்தினங்களில் நிறைவேற்றப்படும் மிகச்சிறந்த அமல் இதுவாகும்.**

**நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:**

**"ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜின் கூலி சுவனத்தை தவிர வேறு கிடையாது." (புகாரி :1773)**

**03. குர்பானி நிறைவேற்றுவது.**

**இது வலியுறுத்தப்பட்ட சுன்னத் ஆகும். யார் குர்பானி நிறைவேற்ற ஆசைப்படுவாரோ அவர் துல்ஹஜ் மாதம் ஆரம்பத்தில் இருந்தே தன் முடிகளையோ, நகங்களையோ களைவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.**

**04. அதிகமதிகம் லா இலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர், அல்ஹம்துலில்லாஹ் என்று கூற வேண்டும்.**

**தக்பீர் சொல்லும் முறையானது:**

**அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் லா இலாஹ இல்லல்லாஹு அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து.**